தி இந்து
தமிழால் இணைவோம்

# காலத்தைை வென்று நிற்கும் கற்பகதரு! காப்பாற்ற இதுவே சரியான தருணம்

Sunday April 12,2015

ஜி.ஞானவேல்முருகன்

■ திருச்சி

பூமியில் வாழ்கின்ற அனைத்து உயிரினங்களுக்கும் வாழ்வாதாரமாக இருக்கும் பிராணவாயு, தண்ணீர், உணவு உள்ளிட்ட பல்வேறு பயன்களை நேரடியாகவும், மறைமுகமாகவும் அள்ளித்தருவதால் மரங்களை கற்பகதரு என்று அழைக்கிறோம். ஆனால், வளர்ச்சியைக் காரணம் காட்டி, பல நூற்றாண்டுகள் கடந்த பாரம்பரியமிக்க மரங்கள் வெட்டி அழிக்கப்படுவது வேதனையைத் தருகிறது.

அமெரிக்கா, இங்கிலாந்து, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் நூற்றாண்டு கடந்து நிற்கும் வரலாற்று சிறப்புமிக்க மரங்களைப் பாதுகாக்க சிறப்பு சட்டம் இயற்றியுள்ளனர். அதுமட்டுமின்றி பாரம்பரிய மரங்களின் அருங்காட்சியகத்தையும் உருவாக்கியுள்ளனர்.

இந்தியாவைப் பொறுத்தவரை கேரள மாநிலம், திருவனந்தபுரம் வன ஆராய்ச்சி நிலையத்தினர் பாரம்பரிய மரங்களை பாதுகாக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். மேலும், கர்நாடக உயிர் பன்மைய வாரியம், நூற்றாண்டு கடந்த மரங்களை பாரம்பரிய மரங்களாக அறிவிக்க மாநில அரசுக்கு பரிந்துரை செய்துள்ளது.

டெல்லி, பெங்களூரு, புனே போன்ற பெரிய நகரங்களில் செயல்படும் மரப் பாதுகாப்பு சங்கங்கள் அங்கிருக்கும் பாரம்பரிய மரங்களைப் பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டுள்ளன. ஆனால், தமிழ்நாட்டில் இதுபோன்ற சங்கங்களோ,





▲ 500 ஆண்டுகள் பழமையான உலக்கை பலா மரம் மற்றும் நீர்மருது மரம்.



▲ வ.சுந்தரராஜு

குழுக்களோ அல்லது சட்டமோ ஏதும் அறிமுகம் செய்யப்படவில்லை.

அரசுக் காப்புக் காடுகளில் அரிதான வயது முதிர்ந்த மரங்களைக் காப்பாற்ற தமிழ்நாடு வனச் சட்டம் நடைமுறையில் உள்ளது. தனியார் இடங்கள், சாலையோரம் மற்றும் புறம்போக்கு நிலங்களில் 500 முதல் 700 ஆண்டுகள் கடந்த மரங்கள் இன்றைக்கும் கம்பீரமாக வளர்ந்து நிற்கின்றன. இவற்றை இனம் கண்டு பாரம்பரிய மரங்களாக அறிவித்து, பாதுகாக்க அரசு அவசர சட்டம் இயற்ற வேண்டுமென இயற்கை ஆர்வலர்கள் எதிர்பார்க்கின்றனர்.

இதுகுறித்து தமிழக இயற்கைப் பாதுகாப்பு சங்கத்தின் தலைவர் வ.சுந்தரராஜு 'தி இந்து'விடம் கூறியதாவது: "ராஜபாளையத்தில் ஒரு பள்ளி வளாகத்தில் தற்போது 700 ஆண்டுகள் பழமைவாய்ந்த ஆனைப்புளிய மரம் இன்றைக்கும் நல்ல நிலையில் இருக்கிறது. இதன் சுற்றளவு 57 அடி, உயரம் 83 அடி. பத்து பேர் வரிசையாக கைகளை நீட்டி நின்றாலும் சுற்றளவை எட்டுவது இயலாத ஒன்று என்றால் பார்த்துக்கொள்ளுங்கள் அதன் பிரம்மாண்டத்தை.

குமரி மாவட்டம் ஈசாந்திமங்கலத்தில் 500 ஆண்டுகளை கடந்த நீர்மருது மரம், திருச்சி புளியஞ்சோலையில் 500 ஆண்டுகளுக்கும் மேலான இலுப்பை, துடையூரில் விழுதுகளால் சூழப்பட்ட ஆல மரம் மற்றும் காரைக்குடி, பேச்சிப்பாறை பகுதியில் 300 ஆண்டுகளை கடந்த மரங்கள் என தமிழ்நாட்டில் இதுவரை 50-க்கும் மேற்பட்ட பாரம்பரிய மரங்களை அடையாளம் கண்டு அந்தந்த பகுதியினர் ஒத்துழைப்புடன் பாதுகாக்கும் முயற்சியில் இறங்கியுள்ளோம்.

நூறாண்டுக்குள் இறந்து விடும் மனிதன் பல நூற்றாண்டு கடந்து வாழ்ந்து நமக்கு பலன்தரும் மரங்களின் அருமை தெரியாமல் காசுக்காக வெட்டி அழிப்பதைத் தடுக்க வேண்டுமெனில், தனியார் இடங்களில் இருக்கும் பாரம்பரிய மரங்களை அடையாளம் கண்டு, அவை கணக்கில் கொண்டுவரப்பட வேண்டும். இவற்றைப் பாதுகாப்பதன் அவசியம் குறித்து மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தி, சிறப்பு சட்டம் இயற்ற வேண்டும்" என்றார்.

## கோயிலில் வாழும் மரங்கள்

அரசமரத்தடி விநாயகர், ஆலமர முனீஸ்வரர், வேப்பமர அம்மன்... இப்படி கிராமம் தொடங்கி நகரம் வரை உள்ள கோயில்களில் பல நூற்றாண்டுகளாக பாதுகாப்பாக வாழ்ந்து நமக்கு பலன்தரும் மரங்கள் தமிழகத்தில் ஆயிரக்கணக்கில் இருக்கின்றன. சில இடங்களில் மரங்களே கடவுள்களாக இருப்பது இன்னும் கூடுதல் பாதுகாப்பு.